**விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தலைமையில் நடைபெற்ற 21.01.2022ம் தேதிய அவசரக்கூட்டத்தில் 11,12,13ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்**

பொருள்எண்.01

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட புல எண்.288/5, ரோஸ் கார்டன் பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் எவ்வித மேம்பாட்டு பணி மேற்கொள்ளாமல் உள்ளது. மேற்படி பூங்காவினை மேம்படுத்தும் விதமான பூங்காவினை சுற்றி நடைபாதை வசதிகள், குழந்தைகள் விளையாட்டு திடல் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான திட்ட பிரேரனை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மதிப்பீட்டு தொகையினை முழு மான்யமாக ஏதேனும் திட்ட நிதியில் வழங்க கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.45.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.11**

அனுமதிக்கப்படுகிறது

பொருள்எண்.02

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண் சாலைகளை தார் சாலையுடன் கூடிய வடிகால் அமைக்க அறிவித்துள்ளதை தொடர்ந்து, கோட்டக்குப்பம் நகராட்சியில் கீழ்காணும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான திட்ட பிரேரனை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அனுப்பி மதிப்பீடு தொகையினை முழு மான்யமாக ஏதேனும் திட்ட நிதியில் வழங்க கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு ரூ.இலட்சத்தில். |
|---|---|---|
| 1 | வார்டு எண்.15, மேயர் ரத்தினவேலுபிள்ளை நகர் பகுதியில் தார் சாலையுடன் கூடிய வடிகால் அமைத்தல் | 85.00 |

| | | |
|---|---|---|
| 2 | வார்டு எண்.16, ரெயின்போ கார்டன் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 59.00 |
| | **மொத்தம்** | **144.00** |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.144.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.12</u>**

அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள்எண்.03</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் தேர்தலுக்கான பணிகள் முடிவுற்று தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ள நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்-2022க்கான அனைத்து வகையான தேர்தல் செலவினங்களை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்.13</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

(ஒம்)/ மு.பானுமதி
ஆணையாளர்,
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

// உண்மை நகல்//

ஆணையாளர்
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

**விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தலைமையில் நடைபெற்ற 25.01.2022ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் 14ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள்எண்.01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28, அவர்களின் ந.க.எண். 18598/2021/தி2 கடிதத்தில் நமக்கு நாமே திட்டம் 2021–22 - தனியார் பங்களிப்பு மற்றும் அரசு பங்களிப்புடன் செயல்படுத்துவது கோட்டக்குப்பம் நகராட்சி பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில். |
|---|---|---|
| 1 | வார்டு எண்.6, எம்.ஜி.ஆர் நகர் ஒத்தவாடை ஓடை, சமுதாய கழிவறை அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி | 9.90 |
| 2 | வார்டு எண்.3, பெரியமுதலியார்சாவடி காலனியில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி | 2.50 |
| | **மொத்தம்** | **12.40** |

கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.12.40 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28, அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.14**

அங்கீகரிக்கப்படுகிறது.

(ஒம்) மு. பானுமதி, பி.ஸ்.சி.,
தனி அலுவலர்,
கோட்டக்குப்பம் நகராட்சி.

// உண்மை நகல்//

ஆணையாளர்,
கோட்டக்குப்பம் நகராட்சி